**<u>MCOP No.27/2019</u>**

**<u>தேதி- 23.02.2021</u>**

**<u>ம.சா.1 (முனுசாமி)</u>**

**<u>குறுக்கு விசாரணை-</u>**

எனது வயது, தொழில் மற்றும் வருமானம் ஆகியவற்றை காட்டும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது பொய் என்றாலும் அதுபோல் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் சைக்கிளில் வீட்டிற்கு போய் கொண்டிருந்தேன். அப்பொழுது கார் வந்து என் மீது இடித்தது, காரின் பதிவு எண் எனக்கு தெரியாது. கார் எனக்கு பின்புறமாக வந்து இடித்தது. காவல் துறையில் நான் புகார் தரவில்லை, என் மகன் தான் புகார் கொடுத்தார். 1-ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு முறையான வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ம.சா.ஆ-5 காப்பீடு சான்றின் படி 07.04.2017 தேதியில் தான் காப்பீடு தொடங்குகிறது என்றாலும், விபத்து தேதியில் 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ-3 விடுவிப்புச் சான்றில் எதிரே வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டதாக நான் சொன்னதின் பேரில் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் மனுவில் சொல்லியுள்ளவாறு விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்து தேதியில் காப்பீடு நிலுவையில் இல்லாததால் 2-ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றாலும், 2-ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ S. Syed Barkathullah
Additional District Judge,
Fast Track Court, Arani.